o/c

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2022-2023-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அழிவின் விளிம்பிலுள்ள வீடற்ற பழங்குடியினர் மக்களுக்கு 1094 இலவச வீடுகள் கட்டித் தருதல் – ரூ.49,98,92,420/- – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2) துறை**

**அரசாணை (நிலை) எண்.69**

**நாள் 25.08.2022**
ஆவணி 09, சுபகிருது வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். ப.மே/அ3/2687/2022, நாள் 25.06.2022,.

*******

**ஆணை :-**

2022-2023-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் தொடர்பாக கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"விளிம்பு நிலையில் இருக்கும் இருளர்கள் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு (Particularly Vulnerable Tribal Groups) வரும் நிதியாண்டில் மேலும், 1000 புதிய வீடுகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்",

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நீலகிரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி மற்றும் திருப்பூர் ஆகிய 12 மாவட்டங்களில் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பயனாளிகளின் பட்டியல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில், மாவட்ட வாரியாக தேர்வு செய்து சமதளப்பரப்பில் 269 சதுர அடிக்கு ஒரு தனி வீடு கட்டுவதற்கு ரூ.4,62,000/- மற்றும் மலைப்பகுதியில் ஒரு வீட்டிற்கு ரூ.5,20,000/- என்கிற மதிப்பீட்டு தொகையிலிருந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGS) மூலம் 90 மனித சக்தி நாட்களுக்கு கூலியாக ரூ.24570 வழங்கலாம் என்பதை கணக்கிற் கொண்டு அத்தொகையினை கழித்து சமதளப்பரப்பில் ஒரு வீட்டிற்கு ரூ.4,37,430/- வீதமும், மலைப்பகுதியில் ஒரு வீட்டிற்கு ரூ.4,95,430/- என கணக்கீட்டு கருத்துரு

..2..

அனுப்பியுள்ளதாகவும், மேலும், அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் நல மக்கள் தொகையின் அடிப்படையில் சமதளத்தில் 726 வீடுகளுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.4,37,430/- வீதமும், மலைப்பகுதியில் 368 வீடுகளுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.4,95,430/- வீதமும் ஆக மொத்தம் 1094 வீடுகளுக்கு ரூ.49,98,92,420/- நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நீலகிரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி மற்றும் திருப்பூர் ஆகிய 12 மாவட்டங்களில் உள்ள அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மக்களுக்கு சமதளப்பரப்பில் ஒரு வீட்டிற்கு ரூ.4,37,430/- வீதம் 726 வீடுகளுக்கு ரூ.31,75,74,180/- வும், மலைப்பகுதியில் ஒரு வீட்டிற்கு ரூ.4,95,430/- வீதம் 368 வீடுகளுக்கு ரூ.18,23,18,240/- ஆக மொத்தம் 1094 வீடுகளுக்கு ரூ.49,98,92,420/- (ரூபாய் நாற்பத்தி ஒன்பது கோடியே தொன்னூற்று எட்டு இலட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து நானூற்று இருபது மட்டும்) 2022-2023-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

**அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் நல மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வீடுகளின் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | தேர்ந்தெடுக்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை | அமைவிடம் | | | | தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சமதள பரப்பில் வீடு @ ரூ.4,37,430 | | மலைப்பகுதியில் வீடு @ ரூ.4,95,430 | | |
| 1. | திருவள்ளூர் | 160 | 160 | 69988800 | 0 | 0 | 69988800 |
| 2. | செங்கல்பட்டு | 192 | 192 | 83986560 | 0 | 0 | 83986560 |
| 3. | காஞ்சிபுரம் | 30 | 30 | 13122900 | 0 | 0 | 13122900 |
| 4. | நீலகிரி | 209 | 0 | 0 | 209 | 103544870 | 103544870 |
| 5. | திருவண்ணா மலை | 209 | 178 | 77862540 | 31 | 15358330 | 93220870 |
| 6. | கள்ளக்குறிச்சி | 25 | 25 | 10935750 | 0 | 0 | 10935750 |
| 7. | இராணிப்பேட்டை | 50 | 23 | 10060890 | 27 | 13376610 | 23437500 |
| 8. | திருப்பத்தூர் | 40 | 14 | 6124020 | 26 | 12881180 | 19005200 |
| 9. | கோயம்புத்தூர் | 46 | 21 | 9186030 | 25 | 12385750 | 21571780 |
| 10. | கடலூர் | 24 | 24 | 10498320 | 0 | 0 | 10498320 |
| 11. | தருமபுரி | 50 | 0 | 0 | 50 | 24771500 | 24771500 |
| 12. | திருப்பூர் | 59 | 59 | 25808370 | 0 | 0 | 25808370 |
| | மொத்தம் | **1094** | **726** | **317574180** | **368** | **182318240** | **499892420** |

**(ரூ.49,98,92,420/- ரூபாய் நாற்பத்து ஒன்பது கோடியே தொன்னூற்று எட்டு இலட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து நானூற்று இருபது மட்டும்)**

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் மாநிலச் செலவினங்கள் - JA - விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்"
(IFHRMS DPC : 4225-02-796-JA-41601)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15 அவர்களுக்கு வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி தொகையில், செலவினம் போக மீதித் தொகை இருப்பின், அதனை அரசு கணக்கில் திரும்ப செலுத்தவும், பணிகள் நடைபெறுவது குறித்த மாதாந்திர பருவ அறிக்கையினை அனுப்பவும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.40605/நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)/2022, நாள் 23.08.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ. சு. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நீலகிரி, கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் திருப்பூர்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுவலர், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நீலகிரி, கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் திருப்பூர்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை- 18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை- 8.
நகல்
ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி (ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/அநமு1)துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 0
26.8.22